

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (1.1.2025) ஆங்கிலப் புத்தாண்டு தினத்தையொட்டி சென்னை, மெரினா கடற்கரையில் அமைந்துள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவிடத்தில் மலர்தூவி மரியாதை செலுத்திய பின்னர் அங்கிருந்த பொதுமக்களிடம் ஆங்கிலப் புத்தாண்டு வாழ்த்துக்களை தெரிவித்தார். உடன் இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு உள்ளார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (1.1.2025) முகாம் அலுவலகத்தில், ஆங்கிலப் புத்தாண்டையொட்டி, இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை, துணைஅமைப்புச் செயலாளர்கள் ஆஸ்டின், ப.தாயகம்கவி, தலைமை நிலையச் செயலாளர்கள் துறைமுகம் காஜா, பூச்சி எஸ்.முருகன் ஆகியோர் சந்தித்து வாழ்த்துப் பெற்றனர்.



கேரள மாநிலம், கோட்டயம் மாவட்டம் வைக்கம் நகரில் இருந்து வேளாங்கண்ணி வரை தமிழக அரசு சார்பில் பேருந்துகள் இயக்கம், முதல்வர் – தலைவர் அவர்களின் உத்தரவின்படி நேற்று முன்தினம் மாலை 5 மணியளவில் கேரள மாநில போக்குவரத்துத் துறை அமைச்சர் கே.பி.கணேஷ்குமார் முன்னிலையில் கேரள மாநில தி.மு.க. அமைப்பாளர் கே.ஆர்.முருகேசன் தலைமையில் தமிழக அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் கொடி அசைத்து துவங்கி வைத்தார்.

### காவிரி உபரி நீர் திட்டத்தில் – மீதமுள்ள 25 ஏரிகளுக்கு

# ரூ.105.35 கோடியில் திட்ட மதிப்பீடு சமர்ப்பிப்பு!

## அமைச்சர் இரா.இராஜேந்திரன் தகவல்!

சேலம், ஜன. 3-

காவிரி உபரிநீர் திட்டத்தில் மீதமுள்ள 25 ஏரிகளுக்கும் நீர் நிரப்பும் வகையில் ரூ.105.35 கோடிக்கு திட்ட மதிப்பீடு அரசுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்றும் காவிரி உபரிநீர் திட்டத்தில் சுமார் 70 முதல் 80 சதவிகித ஏரிகளுக்கு நீர்நிரப்பப்பட்டுள்ளது என்றும்

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலுக்கிணங்க, திப்பம்பட்டி நீரேற்று நிலையத்திலிருந்து மின் மோட்டார்கள் மூலம் நீரேற்று செய்யப்பட்டு ஏரிகளுக்கு வழங்கும் செயல்பாட்டினை சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் தொடங்கி வைத்து தெரிவித்தார்.



சேலம் மாவட்டம், மேட்டூர் அணை தனது முழு கொள்ளளவினை எட்டியுள்ள நிலையில், காவிரி உபரிநீரை ஏரிகளுக்கு நீரேற்று மூலம் நிரப்பும் திட்டத்தின் கீழ் சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், திப்பம்பட்டி நீரேற்று நிலையத்திலிருந்து மின் மோட்டார்கள் மூலம் நீரேற்று செய்யப்பட்டு ஏரிகளுக்கு வழங்கும் செயல்பாட்டினை சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் நேற்று முன்தினம் (01.01.2025) தொடங்கி வைத்தார்.

பின்னர், சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் தெரிவித்ததாவது: -

தமிழ்நாடு முதலமைச்சர் ஆட்சி பொறுப்பேற்று இந்தாண்டு மட்டும் மேட்டூர் அணை 3 முறை நிரம்பியுள்ளது. சேலம் மாவட்டம், மேட்டூர் அணை தனது முழு கொள்ளளவான 120 அடியினை எட்டியுள்ள நிலையில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, இன்றையதினம் மேட்டூர் அணையிலிருந்து காவிரி உபரிநீரை நீரேற்று மூலம் ஏரிகளுக்கு வழங்கும் திட்டத்தின் கீழ் மேட்டூர் வட்டம், திப்பம்பட்டி நீரேற்று நிலையத்திலிருந்து மின் மோட்டார்கள் மூலம் நீரேற்று செய்யப்பட்டு ஏரிகளுக்கு வழங்குவது தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

மேட்டூர் அணையின் வெள்ள நீரை சேலம் மாவட்டம், சரபங்கா வடிநிலத்தில் உள்ள வறண்ட ஏரிகளுக்கு நீரேற்றம் மூலம் நீர் வழங்கும் திட்டம் ரூ.673.88 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு அரசால் செயல்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் மேட்டூர் அணையானது அதன் முழு கொள்ளளவான 120 அடியினை எட்டும்பொழுது அணையின் இடது கரையின் நீர் பரப்பு பகுதியிலிருந்து வெள்ள நீரை திப்பம்பட்டி பிரதான நீரேற்று நிலையம், வெள்ளாளபுரம் துணை நீரேற்று நிலையம், கன்னந்தேரி துணை நீரேற்று நிலையம் மூலமாக 82 ஏரிகள், குளங்களுக்கு நீர் சென்றடையும் வகையில் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் சுமார் 70 முதல் 80 சதவிகித ஏரிகளுக்கு நீர் நிரப்பப்பட்டுள்ளது. இதன் மூலம் 4,061.16 ஏக்கர் நிலங்கள் பாசனம் மற்றும் குடிநீர் வசதிபெற வழிவகை செய்யப்பட்டுள்ளது.

தென்மேற்கு பருவமழையின் காரணமாக மேட்டூர் அணை முழுகொள்ளளவை எட்டியதால் கடந்த 31.7.2024 முதல் மூன்று நீரேற்று நிலையங்களிலும் உள்ள 27 மின் மோட்டார்கள் மற்றும் பம்புகளுக்கான சோதனை ஓட்டத்தின் மூலம் 40 ஏரிகளுக்கு 267 மில்லியன் கன அடி நீர் நீரேற்றம் செய்யப்பட்டு 2,300 ஏக்கர் நிலம் பாசன வசதி பெற்றுள்ளது. இதன்மூலம் விவசாயப் பயன்பாடு மற்றும் குடிநீர் தேவைகளைப் பூர்த்தி செய்திட வழிவகை செய்யப்பட்டுள்ளது.

மேலும், பெஞ்சல் புயலின் காரணமாக சேலம் மாவட்டம் சேர்வராயன் மலைப்பகுதிகளில் அதிக மழை பெய்து சரபங்கா ஆற்றின் ஏற்பட்ட வெள்ள பெருக்கு காரணமாக கடந்த 14.12.2024 முதல் 19.12.2024 வரை வெள்ளாளபுரம் துணை நீரேற்று நிலையம் மற்றும் கன்னந்தேரி துணை நீரேற்று நிலையம் இயக்கப்பட்டது. இதன் மூலம் 15 ஏரிகள் முழுகொள்ளளவை எட்டியுள்ளது.

தமிழ்நாடு முதலமைச்சர் தேர்தல் வாக்குறுதியில் தெரிவித்தபடி, பாரபட்சம் இல்லாமல் அனைத்துத்தரப்பு மக்களும் பயன்பெறும் வகையில் சேலம் மாவட்டத்தில் கூட்டுறவு நிறுவனங்களில் நகைக்கடன் பெற்ற 1,43,000 பயனாளிகளுக்கு ரூ.481 கோடியும், 5,200 மகளிர் சுய உதவி குழுக்களை சேர்ந்த 55,000 மகளிர் பயன்பெறும் வகையில் ரூ.132 கோடி மகளிர் சுயஉதவிக்குழு கடன் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. குறிப்பாக, முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தின் கீழ் தமிழ்நாடு முழுவதும் சுமார் 20 இலட்சம் பள்ளிக் குழந்தைகளுக்கு காலை உணவு வழங்கப்பட்டு பயன்பெற்று வருகின்றனர். மகளிர் கட்டணமில்லா பேருந்து பயணத் திட்டத்தின் மூலம் 19 கோடி பயணங்களும், மாதந்தோறும் ரூ.1,000/ வழங்கும் புதுமைப்பெண் திட்டத்தின் மூலம் 24,000 மாணவிகளும், தமிழ்ப்புதல்வன் திட்டத்தின் கீழ் 16,000 மாணவர்களும், நான் முதல்வன் திட்டத்தின் மூலம் 82,837 மாணவ, மாணவிகளுக்கு திறன் பயிற்சிகளும் வழங்கப்பட்டு பயன்பெற்று வருகின்றனர்.

தற்பொழுது, மேட்டூர் அணை முழுகொள்ளளவை எட்டியதால் திப்பம்பட்டி பிரதான நீரேற்று நிலையத்திலிருந்து வாத்திப்பட்டி ஏரி, செலவடை ஏரி ஆகிய 2 ஏரிகளுக்கும் நீர்குறைந்துள்ள மற்ற ஏரிகளுக்கும் 100 சதவிகிதம் நீர்நிரப்பும் பணி தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள, 25 ஏரிகளுக்கு இணைப்புக் கால்வாய் அமைத்திட ரூ.105.35 கோடிக்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அரசுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. நங்கவள்ளி ஊராட்சி ஒன்றியம், லெனின் நகர் பகுதி பொதுமக்கள் சாலை வசதி வேண்டி தெரிவித்திருந்தனர். இச்சாலை பணிகள் விரைவில் அமைத்துத் தரப்படும் என்ற தகவலை தெரிவித்து கொள்கிறேன்.

இவ்வாறு சுற்றுலாத் துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து, காவிரி உபரிநீரை ஏரிகளுக்கு நீரேற்று மூலம் நிரப்பும் திட்டத்தின் கீழ் சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், திப்பம்பட்டி நீரேற்று நிலையத்திலிருந்து மின் மோட்டார்கள் மூலம் நீரேற்று செய்யப்பட்டு நங்கவள்ளி ஊராட்சி ஒன்றியம் சூரப்பள்ளி கிராமம், வாத்திப்பட்டி எரிக்கு நீர் வந்தடைந்ததை சுற்றுலாத் துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் மலர்தூவி வரவேற்றார்கள்.

இந்நிகழ்வுகளின்போது, மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா. பிருந்தாதேவி, சேலம் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம். செல்வகணபதி, மேட்டூர் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.சதாசிவம், மேட்டூர் சார் ஆட்சியர் திருமதி நே.பொன்மணி, நீர்வளத் துறை சரபங்கா வடிநிலக் கோட்ட மேற்பார்வை பொறியாளர் சிவக்குமார், சரபங்கா வடிநிலக் கோட்ட செயற்பொறியாளர் அப்புசாமி, மேட்டூர் செயற்பொறியாளர் வெங்கடாசலம், நங்கவள்ளி ஊராட்சி ஒன்றிய குழு உறுப்பினர் ராஜேஷ் மற்றும் அர்த்தநாரீஸ்வரன் உள்ளிட்ட தொடர்புடைய அரசு அலுவலர்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், விவசாயிகள் உடனிருந்தனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பிறந்தநாளை முன்னிட்டு கோவை வடக்கு மாவட்ட தி.மு.க. இளைஞரணி சார்பில் மாவட்ட துணை அமைப்பாளர் வே.சூரியன்தம்பி ஏற்பாட்டில் மாபெரும் இலவச கண் மருத்துவ முகாம் தடாகத்தில் நடைபெற்றது. இம்முகாமிற்கு மாவட்ட அமைப்பாளர் எம்.ஏ.ஆர்.கே.ஹக்கீம் தலைமை தாங்கினார். ஒன்றியச் செயலாளர் சி.எம்.கே.குமார், தலைமைச் செயற்குழு உறுப்பினர் டி.பி.சுப்பிரமணியன், அசோக்பாபு, ஆறுக்குட்டி, மூ.கனகராஜ், சோ.துரைபாண்டியன், பி.கே.அருணாச்சலம், பி.டி.கோபால்சாமி, டி.வி. செல்வராஜ், அருண், அசோக், விஜயராணி, பிரபாவதி, பெருமாள்சாமி, பாபு, கந்தசாமி, முருகேசன், சோமையனூர் சோமசுந்தரம், சின்னசாமி, காளையனூர் ஜீவானந்தம், மடத்தூர் தண்டபாணி, சபரீஸ்வரன், பரமேஸ்வரன், சடகுட்டி, மல்லிகார்ஜுணன், வடிவேல் ஜெகன் பிரசாந்த் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### தஞ்சாவூர் மாவட்டத்தில்

# 3542 தொழிலாளர்களுக்கு ரூ.1.42 கோடி மதிப்பில் நலத்திட்ட உதவிகள்!

## அமைச்சர் சி.வி.கணேசன் வழங்கினார்! அமைச்சர் கோவி.செழியன் பங்கேற்பு!

தஞ்சாவூர், ஜன.3 -

தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணம் பழைய நகராட்சி அலுவலக வளாகத்தில் தொழிலாளர் நலத்துறை சார்பில் தொழிலாளர்களுக்கு நலத்திட்ட உதவிகளை உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன், தொழிலாளர் நலன்திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி.கணேசன் ஆகியோர் மாவட்ட ஆட்சித்தலைவர் பா.பிரியங்கா பங்கஜம், தலைமையில் வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில் தஞ்சை வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் சு.கல்யாண சுந்தரம் எம்.பி., மத்திய மாவட்டக் கழகச் செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ., கும்பகோணம் சட்டமன்ற உறுப்பினர் க.அன்பழகன், கும்பகோணம் மாநகராட்சி மேயர் க.சரவணன், துணை மேயர் சுப.தமிழழகன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இந்நிகழ்ச்சியில் தொழிலாளர் நலன்திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி.கணேசன் பேசியதாவது:-

முதலமைச்சர் அவர்களின் உத்தரவிற்கிணங்க, தஞ்சாவூர் மாவட்டத்தில் கும்பகோணம் பழைய நகராட்சி அலுவலக வளாகத்தில் தொழிலாளர் நலத்துறை சார்பில் தொழிலாளர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா இன்று நடைபெற்றது.

உடலுழைப்பு தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை பாதுகாக்கும் பொருட்டு, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் 17.03.1999 அன்று தமிழ்நாடு உடலுழைப்பு தொழிலாளர்கள் சமூக பாதுகாப்பு நலவாரியம் உருவாக்கப்பட்டு, தொடர்ந்து 2006 முதல் 2011 வரை 15 தனி நலவாரியங்கள் உருவாக்கப்பட்டன.

மேலும், அமைப்புசாரா தொழிலாளர்களின் நலனை கருத்தில் கொண்டு பதிவு மற்றும் புதுப்பித்தலின் போது வசூலிக்கப்பட்ட கட்டணங்கள் 01.09.2006 முதல் முத்தமிழ் அறிஞரால் முழுமையாக ரத்து செய்யப்பட்டது.

அமைப்புசாரா தொழிலாளர்களின் சிரமங்களை கருத்தில் கொண்டு அவர்களுக்கு பதிவு செய்தல், புதுப்பித்தல் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்குவதற்கு ஏதுவாக 01.11.2008 முதல் மாவட்டங்கள் தோறும் தொழிலாளர் உதவி ஆணையர் (ச.பா.தி) அலுவலகங்கள் ஆரம்பிக்கப்பட்டன.

மேலும், அமைப்புசாரா தொழிலாளர்கள் எளிய முறையில் பதிவு செய்யவும், புதுப்பிக்கவும் மற்றும் நலத்திட்ட உதவிகள் பெறுவதற்கு ஏதுவாக 15.09.2009 முதல் கணினிமயமாக்கப்பட்டன.

இதன் தொடர்ச்சியாக, முதலமைச்சர் அவர்களால் இணையதளம் வழி உணவு மற்றும் பொருட்கள் விநியோகிக்கும் தொழிலாளர்களுக்கென தனியே உருவாக்கப்பட்ட தமிழ்நாடு இணையம் சார்ந்த கிக் தொழிலாளர்கள் நலவாரியத்தையும் சேர்த்து தற்போது 20 அமைப்புசாரா தொழிலாளர் நலவாரியங்கள் அமைப்புசாரா தொழிலாளர்களின் நலனுக்காக தொழிலாளர் துறையின் கீழ் செயல்பட்டு வருகின்றன.

இவ்வாறு அமைப்புசாரா தொழிலாளர்களுக்கு சமூக பாதுகாப்பு வழங்கி அவர்களின் வாழ்வில் ஒளியேற்றியதன் மூலம், இந்தியாவிலேயே தமிழ்நாடு முன்னணி மாநிலமாக திகழ்கிறது.

தஞ்சாவூர் மாவட்டத்தில் இதுவரை 70,560 உறுப்பினர்கள் 20 அமைப்புசாரா தொழிலாளர் நலவாரியங்களில் பதிவு செய்துள்ளனர். கடந்த 07.05.2021 முதல் 30.11.2024 வரை மட்டும் 49,699 தொழிலாளர்கள் நலவாரியங்களில் பதிவு செய்துள்ளனர்.

அதே போல், கடந்த 07.05.2021 முதல் 30.11.2024 வரை தமிழ்நாடு கட்டுமானத்தொழிலாளர்கள் நலவாரியத்தில் 14,896 நபர்களுக்கு ரூ.13,82,25,430/ (ரூபாய் பதிமூன்று கோடியே எண்பத்திரண்டு இலட்சத்து இருபத்தைந்தாயிரத்து நானூற்று முப்பது மட்டும்) மதிப்பீட்டிலும், தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் சமூக பாதுகாப்பு மற்றும் நலவாரியத்தில் 20,746 நபர்களுக்கு ரூ.20,13,81,530/ (ரூபாய் இருபது கோடியே பதிமூன்று இலட்சத்து எண்பத்தொராயிரத்து ஐநூற்று முப்பது மட்டும்) மதிப்பீட்டிலும், தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் நலவாரியத்தில் 2,003 நபர்களுக்கு ரூ. 1,41,02,060/ (ரூபாய் ஒரு கோடியே நாற்பத்தொரு இலட்சத்து இரண்டாயிரத்து அறுபது மட்டும்) மதிப்பீட்டிலும் என மொத்தம் 37,645 தொழிலாளர்களுக்கு ரூ.35,37,09,020/ (ரூபாய் முப்பத்தைந்து கோடியே முப்பத்தேழு இலட்சத்து ஒன்பதாயிரத்து இருபது மட்டும்) மதிப்பீட்டில் கல்வி, திருமணம், இயற்கை மரணம், விபத்து மரணம், பணியிடத்து விபத்து மரணம், கண்கண்ணாடி உதவித்தொகை, மகப்பேறு, ஓய்வூதியம், குடும்ப ஓய்வூதியம் போன்ற நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

மேலும், இன்று பதிவு பெற்ற 20 பெண் ஆட்டோ ஓட்டுநர்களுக்கு புதிய ஆட்டோ வாங்குவதற்கு மானியமாக தலா ரூபாய் ஒரு இலட்சம் வீதம் ரூ.20,00,000/ (ரூபாய் இருபது இலட்சம்). பணியிடத்தில் விபத்து மரணமடைந்த 4 கட்டுமான தொழிலாளர்களுக்கு தலா ரூபாய் ஐந்து இலட்சம் வீதம் ரூ.20,00,000/ (ரூபாய் இருபது இலட்சம்) உட்பட கல்வி, திருமணம், விபத்து மரணம், இயற்கை மரணம், ஓய்வூதியம், கண்கண்ணாடி போன்ற பல்வேறு நலத்திட்ட உதவிகள் ரூ.1,42,00,950/ (ரூபாய் ஒரு கோடியே நாற்பத்திரண்டு இலட்சத்து தொள்ளாயிரத்து ஐம்பது) மதிப்பீட்டில் 3,542 தொழிலாளர்களுக்கு இன்று வழங்கப்பட்டுள்ளது. தஞ்சாவூர் மாவட்டத்தில் தொழிலாளர் நலத்துறை போன்ற அனைத்து துறைகளின் நலத்திட்டங்களை பொது மக்கள் பெற்று பயனடையுமாறு தொழிலாளர் நலன்திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி.கணேசன் தெரிவித்தார்.

அதனைத் தொடர்ந்து முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, அம்மாபேட்டை, சாலியமங்கலம், பாபநாசம், கும்பகோணம் வழியாக சென்னை கிளாம்பாக்கம் புதிய வழித்தடத்தில் பேருந்து இயக்கத்தினை உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர். கோவி.செழியன், தொழிலாளர் நலன்திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி.கணேசன் ஆகியோர் கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் செ.இராமலிங்கம், மாவட்ட ஊராட்சிக்குழு துணைத்தலைவர் எஸ்.கே.முத்துசெல்வன், ஒன்றியக் குழுத் தலைவர்கள் கே.வீ.கலைசெல்வன், சுபாதிருநாவுக்கரசு, சுமதி கண்ணதாசன், திருப்பனந்தாள் ஒன்றியக் குழுத் துணைத் தலைவர் கோ.க.அண்ணாதுரை, தொழிலாளர் உதவி ஆணையர் த.ஆனந்தன், கூடுதல் தொழிலாளர் ஆணையர் .திவ்யநாதன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

### திருமானூர் கிழக்கு ஒன்றியம் சார்பில்

# துணை முதல்வர் பிறந்தநாள் தெருமுனைப் பிரச்சாரக்கூட்டம்!

அரியலூர், ஜன. 3 -

அரியலூர் மாவட்டம், திருமானூர் கிழக்கு ஒன்றியம் சார்பில், கழக இளைஞரணி செயலாளர், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழா மற்றும் திராவிட மாடல் அரசின் சாதனை விளக்க தெருமுனை பிரச்சாரக் கூட்டம், மாவட்டச் செயலாளர் அமைச்சர் சா.சி. சிவசங்கர் வழிகாட்டுதல் படி, ஒன்றிய கழக ச்செயலாளர் இரா. கென்னடி தலைமையில் நடைபெற்றது.

கிளை செயலாளர் சதாசிவம் வரவேற்புரையாற்றினார்.

கே.ஜி.எஸ்.முருகன் ஒன்றிய அவைதலைவர், மாவட்டப் பிரதிநிதிகள் மு.முத்தமிழ்செல்வன், எஸ்.பி.எஸ். பழனிசாமி, ஆர்.வி.முருகானந்தம், மாவட்ட தொண்டரணி அமைப்பாளர், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் எஸ்.ஆர்.முருகேசன், மாவட்ட விவசாய அணி துணை அமைப்பாளர் துரை.தியாகராஜன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

நடைபெற்ற தெருமுனைக் கூட்டத்தில் தலைமைக் கழக பேச்சாளர் நாத்திகம் நாகராஜ், கழக இளம் பேச்சாளர் ஜெயஸ்ரீ ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள்.

இக்கூட்டத்தில் மாவட்ட துணைச் செயலாளர் லதா பாலு, ஒன்றிய துணைச் செயலாளர்கள் எஸ்.ராஜா, மணிகண்டன், ஒன்றிய பொருளாளர் ஆனஸ்ட் அம்பிகாவதி, மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் செல்வ.பிரபாகரன், மாவட்ட வர்த்தகர் அணி துணை அமைப்பாளர் உத்திராபதி, ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் எம்.இலக்கியதாசன், ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர்கள் எல்.கே.அருண், பெ.கருணாநிதி, ஒன்றிய மாணவரணி துணை அமைப்பாளர் சிலம்பரசன், ஒன்றிய தொண்டரணி அமைப்பாளர் முருகானந்தம் மற்றும்

மாவட்ட, ஒன்றிய கழகத் தோழர்கள், பொதுமக்கள் பலரும் கலந்துகொண்டனர்.

நிறைவாக ஒன்றிய பிரதிநிதி மு.அழகர் நன்றி கூறினார்.



கோவை தெப்பக்குள மண்டல பா.ஜ.க. இளைஞர் அணி தலைவர் என்.விஷ்ணு மற்றும் இளைஞர் அணி மண்டல செயலாளர் என்.நிதிஷ் ஆகியோர் ஏற்பாட்டில், பா.ஜ.க. கிளைத் தலைவர் பி.ஆண்டவர், மண்டல செயற்குழு உறுப்பினர்கள் . ஆகாஷ், ஸ்ரீ சக்தி, வார்டு பொறுப்பாளர் கிஷோர், மண்டல செயற்குழு உறுப்பினர் நிவேதா ஆகியோருடன், 75 க்கும் மேற்பட்ட பா.ஜ.க.வினர் தமிழ்நாடு மின்சாரம் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் வி.செந்தில்பாலாஜி முன்னிலையில் தி.மு.க.வில் தங்களை இணைத்துக் கொண்டனர். உடன் கோவை மாநகர் மாவட்டச் செயலாளர் நா.கார்த்திக், வடக்கு மாவட்டச் செயலாளர் தொ.அ.ரவி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் கணபதி பா.ராஜ்குமார், கே.ஈஸ்வரசாமி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஏர்போர்ட் ராஜேந்தர், மாநகர் மாவட்ட துணைச் செயலாளர் கோட்டை அப்பாஸ், பகுதிக் கழகச் செயலாளர்கள் மார்க்கெட் எம்.மனோகரன், வி.ஐ.பதுருதீன், வட்டச் செயலாளர் சிவக்குமார் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.